
பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

ஆனைமலையாறு – நல்லாறு ஏன் வேண்டும்?



உடுமலை ரவி

மானமும், அறிவும் மனிதருக்கு அழகு

- பெரியார்

ரவி அச்சகம் 2, புறவழிச் சாலை, உடுமலைப்பேட்டை. 99439 78256

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

ஆனைமலையாறு – நல்லாறு ஏன் வேண்டும்?

உடுமலை ரவி



வெளியீடு :
கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம்
ஏர்முனை இளைஞர் அணி
ஆனைமலையாறு நல்லாறு தண்ணீருக்கான இயக்கம்

தொடர்புக்கு :

ஏர்முனை சுரேஷ் : 97152 16644

ஏர்முனை மாணிக்கராஜ் : 75021 88104

ஏர்முனை சக்திவேல்மணி : 73388 22436

ஏர்முனை ஜோதிப்பிரகாஷ் : 96294 49220

நூற்குறிப்பு

நூலின் பெயர்	:	பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் ஆனைமலையாறு - நல்லாறு ஏன் வேண்டும்?
ஆசிரியர்	:	உடுமலை ரவி
பதிப்பு	:	ஆகஸ்ட் 2018
பக்கங்கள்	:	48 பக்கங்கள்
வரலாறு தொகுப்பு	:	கொங்கு மண்டல ஆய்வு மையம், உடுமலைப்பேட்டை. பேச : 99439 78256
அச்சாக்கம்	:	ரவி அச்சகம், உடுமலைப்பேட்டை. பேச : 99439 78256.
வெளியீடு	:	கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் ஏர்முனை இளைஞர் அணி ஆனைமலையாறு நல்லாறு தண்ணீருக்கான இயக்கம்
விலை	:	ரூ. **50/-**

இரா.ரவிக்குமார்

கொங்குமண்டல ஆய்வு மையம்,

உடுமலைப்பேட்டை.

போர்முனையில் ஏர்முனை

கடும் வறட்சியின் பிடியிலிருந்த கொங்கு மண்டலத்தை பசுமை மண்டலமாக மாற்றியதில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

1920 இல் ஆங்கிலேயே அரசாங்கம் நீர் மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஆர்.என்.ஆரோக்கியசாமி முதலியார் அவர்களை பொறியாளராக நியமித்து மேற்கு தொடர்ச்சி மலையில் திட்டங்களை தயார்படுத்தியது. ஆர்.என்.ஆரோக்கி யசாமி முதலியார் அவர்கள் 04.12.1926 முதல் 16.03.1928 வரை நீதிக்கட்சியின் ஆட்சியில் சுப்பராயன் மந்திரி சபையில் மருத்துவம், மீன்வளம், வரிவிதிப்பு, பொதுப்பணி ஆகிய துறைகளை கவனிக் கும் மந்திரியாக இருந்தார். இவரது காலத்தில் துங்கபத்ரா அணைத் திட்டம், பைகாரா அணைத்திட்டம், கீழ்பவானி அணைத் திட்டம், தாம்பரம் சானிடோரியம் ஆகியவற்றை செயல்படுத்து வதில் முனைப்புடன் இருந்தார். அவினாசி அத்திகடவு திட்டத்தின் திட்ட அறிக்கையையும் தயாரித்துக் கொடுத்தார்.

விவசாயப் போராட்டத்தலைவர் என்.ஜி.ரங்கா அவர் களுடன் மிக நெருக்கமாக பணியாற்றினார். இவரது செயல் பாடுகளைக் கண்டு வியந்த ஆங்கிலேய அரசாங்கம் இவருக்கு ராவ்பகதூர், திவான் பகதூர் பட்டங்களைக் கொடுத்து சிறப்பித்தது. 1921 ஆம் ஆண்டு அதரப்பள்ளி ஆழியாறு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார். இத்திட்டத்தை செயல்படுத்தி இருந்தால் 75 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்திற்கு கிடைத்திருக்கும். பொருளாதார சூழ்நிலை காரணமாக இத்திட்டம் செயல்படுத்த முடியாமல் கிடப்பில் போடப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின் ஏற்பட்ட அமைச்சரவையில் இத்திட்டத்தை செயல்படுத்த

வேட்டைக் காரன்புதூர் **வி.கே.பழனிச்சாமிக்கவுண்டர்** அவர்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொண்டார். கனரக இயந்திரங் களோ, அதிநவீன இயந்திரங்களோ இல்லாத அக்காலகட்டத்தில் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்து இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்த, உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து இத்திட்டத்தை செயல்படுத்தியதன் காரணமாக **பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் தந்தை** என்று அன்புடன் அழைக்கப்படுகிறார்.

நீண்ட தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்கள் பெருந்தலைவர் காமராசர், கக்கன், இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட், ஆர்.கிருஷ்ணய்யர், சி.சுப்பிரமணியம், வி.கே.பழனிச்சாமிக் கவுண்டர், அருட்செல்வர் மகாலிங்கம், உடுமலை தொழிலதிபர் வித்யாசாகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராமமூர்த்தி, முதன்மைப் பொறியாளர் ஆனந்தராவ் உட்பட பலரும் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த விரும்பியதால் இத்திட்டம் கையில் எடுக்கப்பட்டது. அரசின் கடும் பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும் நீர்மேலாண்மை தொடர்பான பல திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்திக் கொண்டிருந்த காரணத்தினாலும் இத்திட்டம் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டமாக சுருக்கப்பட்டது.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் ஆனைமலையாறு நல்லாறு திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் திருப்பூர் மாவட்டம், ஈரோடு மாவட்டத்தின் பெரும்பகுதி விவசாயம் செழிப்படையும்.

07.10.1961 அன்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

1962 இல் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அமைச்சரவைக்கு சென்றுவிட்டார். அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த இராமையா அவர்கள் நிதிப்பற்றாக் குறையை காரணம் காட்டி நிதி ஒதுக்கவில்லை.

1962 - 1967 இல் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதியை ஒதுக்குவதற்கான முயற்சியை தமிழக அரசு மேற் கொள்ளாத காரணத்தால் திட்டம் செயல்படுத்துவதில் காலதாமதமாகியது. இந்த இடைப்பட்ட காலத்தில் பொறியாளர் ஆனந்தராவ் அவர்கள் ஓய்வு பெற்று சென்றபின், பொறியாளர் ஆபிரகாம் அவர்கள் திட்டப்பொறுப்பிற்கு வந்தார். பொறியாளர் ஆபிரகாம் அவர்களுக்கு உரிய அதிகாரம் கொடுக்காததன் காரணமாக இத்திட்டம் சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. சென்னையில் திட்டம் பற்றிய தீவிரமின்மை, கேரள அரசியல் மாற்றங்கள் இவற்றால் சரியான ஒப்பந்தம் செயல்படுத்த முடியாமல் நின்றுபோனது.

காங்கயத்தில் 1963 ஆம் ஆண்டு விவசாயிகள் மாநாடு நடந்தபோது அம்மாநாட்டில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காங்கயம் பகுதிக்கு பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலிருந்து தண்ணீர் கொடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

இடைமலையாறு அணை கட்டப்பட்டபின் ஆனைமலை யாறு நல்லாறு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். கேரள அரசால் இடமலையாறு அணை கட்டப்பட்டுவிட்டது. ஆனால் ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை செயல்படுத்துவதற்கு கேரள அரசு ஒப்புதல் தர மறுக்கிறது.

அவிநாசி அத்திக்கடவு திட்டத்தை செயல் படுத்துவதில் அரசு மெத்தனமாக இருந்தது. இந்நிலையில் பொதுமக்கள் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டி பல போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம் எனத் தொடர்ச்சியாக செயல் பட்டதன் விளைவு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதேபோன்று பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலும் விடுபட்ட அணைகளை உடனடியாக கட்டுவதற்காக **ஆனைமலையாறு நல்லாறு தண்ணீருக்கான இயக்கம்** என்ற இயக்கத்தை ஏர்முனை இளைஞரணி துவக்கியுள்ளது.

கட்சிசார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத் தலைவராக திறம்பட பணியாற்றிய, உழவர் காவலன் பேராசிரியர்

என்.எஸ்.பழனிச்சாமி அய்யா அவர்களின் இளவல், ஏர்முனை இளைஞரணியின் தலைவர் **என்.எஸ்.பி.வெற்றி** அவர்கள் தலைமைப் பொறுப்பேற்று செயலாற்றி வருகிறார். இவருக்கு பக்கபலமாக இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் உள்ளனர்.

இந்திய ஒன்றியத்தில் உள்ள பல்வேறு மாநிலங்கள் இடையே ஆற்று நீரை பகிர்ந்து கொள்வதில் தகராறு நீடித்து வருகிறது. தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் காவிரி தண்ணீர் பிரச்சனை, ஆந்திரா – கர்நாடகா அலமோதி பிரச்சனை, மகாராஷ்ட்ரா – ஆந்திரா பாபிலி திட்டப் பிரச்சனை, ஆந்திரா – தமிழ்நாடு பாலாறு பிரச்சனை, தமிழ்நாடு – கேரளா முல்லைப் பெரியாறு, நொய்யல், பவானி, அமராவதி, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் என பல நீர் மேலாண்மைப் பிரச்சனைகள். நதிகளை தேசிய மயமாக்கினால் மட்டுமே நதிநீர் இணைப்பும் சாத்தியப்படும். நீர் மேலாண்மை தொடர்பான வழக்குகளும் முற்றுப்பெறும்.

இந்த நூல் வெளியிடுவதற்கான திட்ட வரைவுகளை எனக்கு வழங்கி உதவிய பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட வடிநில தலைமைப் பொறியாளரும் தற்போது தமிழ்நாடு நீராதார வளர்ச்சி வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவராக பணியாற்றும் முனைவர் இரா.இளங்கோவன் M.E., P.hd., அவர்களுக்கும் எனது அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது வரலாற்று ஆய்வுகளுக்கு பக்கபலமாக இருக்கும் அனைவருக்கும் எனது அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்று ஆய்வாளர்களும் சமூக ஆர்வலர்களும் இந்த நூலினைப் படித்துப் பயன் பெறுவார்களாக.

என்றும் அன்புடன்...

18.08.2018

உடுமலை.

(இரா.ரவிக்குமார்)

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம் ஒரு கண்ணோட்டம்

ஆசியாவின் மிகப்பெரிய பாசன திட்டங்களில் ஒன்றான தமிழகப் பொறியாளர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் பரம்பிக் குளம் ஆழியாறு திட்டம். கேரளா, தமிழ்நாடு ஆகிய இருமாநில மக்கள் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பான திட்டமாகும். தற்போதுள்ள அதிநவீன கட்டுமான தொழில் நுட்பங்கள் இல்லாத காலத்தில் தமிழர்களின் கடும் உழைப்பினால் இத்திட்டம் உருவாகியது. இத்திட்டம் உருவாகியதன் காரணமாக தற்போதைய கோவை, திருப்பூர் மாவட்டங்களும் கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் சித்தூர் தாலூக்காவும் கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில்,

1. ஆனைமலை ஆறு
2. நீராறு
3. சோலையாறு
4. பரம்பிக்குளம்
5. தூணக்கடவு
6. பெருவாரிப்பள்ளம்

ஆகிய 6 ஆறுகள் ஆனைமலை மலைத்தொடரில் அமைந்துள்ளன. இத்துடன் மலையடிவாரத்தில் சமவெளியில் ஆழியாறு, பாலாறு ஆகிய இரண்டு நதிகளும் இத்திட்டத்தில் உள்ளன. இத்திட்டத்தில் உள்ள நதிகளில் பரம்பிக்குளம் ஆறும், ஆழியாறு ஆறும் பிரதான ஆறுகளாகும். இதன் காரணமாக இத்திட்டம் **பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்** எனப்பெயர் பெற்றது.

ஆனைமலைத் தொடரில் உள்ள ஆறு நதிகளுடன் சமவெளியில் உள்ள பாலாறு, ஆழியாறு ஆகிய எட்டு நதிகளையும் மேல்நீராறு சுரங்கப்பாதை, கீழ்நீராறு சுரங்கப் பாதை, ஆனை மலையாறு சுரங்கப்பாதை, சோலையாறு சுரங்கப்பாதை, பரம்பிக்குளம் சுரங்கப்பாதை, சர்க்கார்பதி சுரங்கப்பாதை, காண்டூர் கால்வாய், நவமலை சுரங்கப்பாதை, காண்டூர் சமநிலை கால்வாய் என பல நீர்வழித்தடங்களை ஆனைமலை மலைத்தொடரில் உருவாக்கி மேல்நீராறு அணை, கீழ்நீராறு அணை, சோலையாறு அணை, பரம்பிக் குளம் அணை, தூணக்கடவு அணை, பெருவாரிப்பள்ளம் அணை, ஆழியாறு அணை, திருமூர்த்தி அணை ஆகிய அணைகள் கட்டப்பட்டு இத்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய், ஏழுகுளம் பாசன கால்வாய், திருமூர்த்தி அணை மேல்நிலைக்கால்வாய், ஆழியாறு பழைய அணைக்கட்டு, பொள்ளாச்சி கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், சேத்துமடை கால்வாய், ஆழியாறு ஊட்டுக்கால்வாய், காண்டூர் சமநிலைக்கோட்டுக் கால்வாய் ஆகிய கால்வாய்கள் மூலம் தண்ணீர் விவசாயத்திற்கு எடுத்துச்செல்லப் படுகிறது.

இத்திட்டத்தில் ஆனைமலையாறு நல்லாறு திட்டம் மட்டும் இன்னும் செயல்படுத்தப்படாமல் உள்ளது. கேரள மாநில அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் செயல்படுத்த முடியாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்தியா சுதந்திரமடைந்தபோது தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் ஏரிகள், குளங்கள் இருந்தன. ஆனால் தற்போது 39,000 ஏரிகள், குளங்கள் மட்டுமே இருப்பதாக அரசு புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. பூகோள ரீதியாகப் பார்த்தால் தமிழகம் மழை மறைவுப் பிரதேசத்தில் உள்ளது. நீருக்காக அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய இடங்களில் உற்பத்தியாகும் ஜீவ நதிகளை நம்பித்தான் தண்ணீர் பெற வேண்டி இருக்கிறது.

நாடு சுதந்திரமடைந்தபின் மேற்குத் தொடர்ச்சிமலை யில் உற்பத்தியாகி அரபிக்கடலில் கலக்கும் நதிகளின் தண்ணீரை தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று அன்றைய கேரள அரசிடம் தமிழ்நாடு அரசு வேண்டுகோள் வைத்தது. 1957 ஆம் ஆண்டு கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஈ.எம்.எஸ்.நம்பூதிபாட் தலைமையில் அமைச்சரவை ஏற்பட்டது. தமிழகத்தில் பெருந் தலைவர் காமராஜர் ஆட்சி இருந்தது.

இந்நிலையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு இரு முதல்வர்களும் முயற்சிகள் மேற்கொண்டனர். இந்நிலையில் கேரளத்தில் உள்ள காங்கிரஸ் கட்சிப் பொறுப்பாளர்கள் தமிழகத் திற்கு தண்ணீர் கொடுப்பதன் மூலமாக கேரளத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் எனக் கூறத்தொடங்கினர். பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி.ராமமூர்த்தி அவர்களும், சி.சுப்பிரமணியம் அவர்களும் கலந்து பேசி ஒரு திடமான முடிவுக்கு வந்தனர்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் சி.சுப்பிர மணியம் அவர்களும் அன்றைய உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லபத்தை சந்தித்துப் பேசினர். கேரளாவில் காங்கிரஸ் காரர்கள் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்ய அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டனர். ஆனால், எந்தவித வாக்குறுதியும் தர மறுத்து விட்டனர்.

இந்நிலையில் பி.ராமமூர்த்தி அவர்கள் கேரளம் சென்று முதல்வர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் அவர்களையும் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் அவர்களையும் கலந்து ஆலோசித்து திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விபரமாக எடுத்துரைத்தார். அப்போது ஈ.எம்.எஸ்.நம்பூதிபாட் அவர்கள் திட்டத்தை செயல்படுத்துவதற்கு மனதளவில் ஒப்புதல் கொடுத்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையுடைய விவரங்களை பி.ராமமூர்த்தி அவர்கள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜரிடமும், நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் அவர்களி டமும் தெரிவித்து

கேரள அரசோடு நேரடியாக தொடர்பு கொண்டு பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அரசியல் கட்சிகள் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் பற்றி தவறுதலான விமர்சனங்கள் செய்ய வேண்டாம். அதிகாரிகள் மட்டத்தில் சிறப்பான முறையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது என்று அறிக்கை வெளியிட்டார்.

கேரளா, தமிழக அதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சர்கள் மட்டத்திலும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்று உடன்பாடு ஏற்பட்டது.

நீர்ப்பாசன திட்டம் துவங்கும் முன்பு நீர்பிடிப்புப் பகுதியில் கிடைக்கும் மழை அளவு, மழைநீர்க்கணக்கீடு, கட்டப்படும் அணைகளின் கொள்ளளவு, கேரளம், தமிழகத்தில் தண்ணீர் பாயக்கூடிய பரப்பளவு, விவசாயம் செய்யக்கூடிய பயிர் வகைகள், மண்ணின் தன்மை, பாசன பரப்பில் உள்ள தட்பவெப்ப நிலை என அனைத்து விவரங்களையும் ஆய்வு செய்துதான் திட்டம் உருவாக்கப் பட்டது.

இத்திட்டத்தில் கேரள முதல்வர் ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாட், நீர்ப்பாசன அமைச்சர் வி.ஆர்.கிருஷ்ணய்யர், தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜர், வேட்டைக்காரன்புதூர் பழனிச்சாமிக்கவுண்டர் அருட்செல்வர் மகாலிங்கம், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் பி.ராமமூர்த்தி போன்றவர்களின் கடுமையான முயற்சியால் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழக - கேரள ஒப்பந்த விதிகளின்படி இருமாநில பொதுப்பணித்துறை மற்றும் மின்வாரிய தலைமைப் பொறுப்பாளர்களைக் கொண்டு 01.06.1970 இல் கூட்டுநீர் ஒழுங்குவாரியம் அமைக்கப்பட்டது. இந்த வாரியம் பரம்பிக் குளம் ஆழியாறு திட்டத்தில் உள்ள பாசனப் பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறது.

இந்தத் திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து எதிர்பார்த்த அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. கேரளாவில் இடைமலை ஆறு அணை கட்டி முடிக்கப்பட்ட பின் தமிழகத்தில் ஆனைமலை ஆறு மற்றும் நல்லாறு அணைகள் கட்டப்பட வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இடைமலைஆறு அணை கட்டி முடிக்கப்பட்டு 35 வருடங் களுக்கு மேல் ஆகிவிட்டது. இதுவரை இத்திட்டத்தில் விடுபட்டுள்ள ஆனைமலையாறு, நல்லாறு அணைகள் கட்டுவதற்கு எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

1967 ஆம் ஆண்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. முதல் மூன்று ஆண்டு காலத்தில் ஆண்டிற்கு ஒருமுறை ஆறுமாத காலம் தண்ணீர் கிடைத்து வந்தது. ஆனால் பல காரணங்களால் தொடர்ச்சியாக தண்ணீர் கொடுக்க இயலவில்லை. எனவே, ஆண்டுக்கு நான்கரை மாதங்கள் என தண்ணீர் கொடுத்தது. இதையும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனை அடுத்து தமிழகத்தில் உள்ள பரம்பிக்குளம் ஆழியாறு பாசன பரப்பை மூன்று மண்டலங்களாகப் பிரித்து பதினெட்டு மாதங்களுக்கு ஒருமுறை தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் தண்ணீர் விட்டனர். போதுமான தண்ணீர் கிடைக்காத காரணத்தால் மூன்று மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்தையும் இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்கு ஏழுநாட்கள், இன்னொரு பகுதிக்கு ஏழு நாட்கள் என்று பிரித்து தண்ணீர் விட்டனர். ஒன்றரை ஆண்டுக்கு ஒருமுறை நான்கு மாத காலத்தில் 65 நாட்களுக்கு இதேபோல் தண்ணீர் விட்டனர். இதற்கும் போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. இந்நிலையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கு தண்ணீர் விடுவதால் ஒட்டுமொத்த திட்டமும் பாதிப்படைகிறது என விவசாயிகள் நீதிமன்றம் சென்றனர். கூடுதலாக தண்ணீர் கிடைக்கும்போது விரிவாக்கப்பட்ட பகுதிக்கு தண்ணீர் வழங்குவது என சமரசம் செய்யப்பட்டது. இதற்கு பின்னர் ஓரளவு சீரான முறையில் தண்ணீர்

விநியோகம் இருந்தது. இந்நிலையில் தமிழக அரசு சட்டமன்றத்தில் **பரம்பிக்குளம் ஆழியாறு நீர் விநியோக சட்டம் 20/1993** என்று நிறை வேற்றியது. ஆனால், தமிழக அரசாங்கம் ஆனைமலை யாறு, நல்லாறு அணைகள் கட்டி முடிக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது விவசாயிகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

ஒரு மடைவிட்டு ஒருமடை பாசனம் :

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் நடைமுறைப் படுத்தப் பட்ட பின்னர் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. மேலும், தளி, மொடக்குப்பட்டி, பூலாங் கிணறு, பெதப்பம்பட்டி போன்ற பகுதிகள் கரிசல் மண் நிறைந்த பூமிகளாகும். இப்பகுதியில் உள்ள கிணற்று நீர் உப்புத்தன்மை மிகுதியாக இருக்கும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டபின் நீரின் உப்புத்தன்மை வெகுவாகக் குறைந்துள்ளது.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தில் துவக்க காலத்தில் வருடத்திற்கு 135 நாட்கள் நீர்ப்பாசனம் கிடைத்து வந்தது. பாசனப்பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டபின் நான்கு மண்டலங்காள பிரிக்கப்பட்டபின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 135 நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று சுற்றுத் தண்ணீர் மட்டுமே கிடைத்து வந்தது. இந்நிலையில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப் பகுதியில் தென்னை விவசாயம் பெருகியது. கூடுதலான தண்ணீர் தென்னைக்கு தேவைப் பட்டதால் கிணறுகள் தோண்டப்பட்டது. மேலும் ஆழ்குழாய் கிணறுகளும் சுமார் 1500 அடி வரை தோண்டப்பட்டது. இதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்தது.

நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கும் பொருட்டு நான்கு மண்டலங்களிலும் உள்ள கால்வாய்களில் ஒருமடைவிட்டு ஒருமடை பாசனமுறை அமுல்படுத்தவேண்டும் என அரசிடம் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயிகள் கோரிக் கையை

ஏற்று இத்திட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள சாதக பாதகங்களை அறிவதற்காக பொறியாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு 1000 ஏக்கர்களுக்கு மேல் உள்ள கால்வாய்களில் ஒருமடை விட்டு ஒருமடை பாசனம் திட்டத்தை அமுல்படுத்தலாம் என அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டம் ஓரளவு பயன் கொடுத்தது.

இத்திட்டத்தை அனைத்துப் பகிர்மான கால்வாய் களிலும் செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஆய்வு செய்த பொறியாளர் குழு 600 ஏக்கருக்குமேல் பாசனம் பெறும் கால்வாய்களில் இத் திட்டத்தை அமுல்படுத்தலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை அரசு இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

இத்திட்டம் தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர் மாவட்டமும், கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் சித்தூர் பகுதியும் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டது. இரு மாநில ஒப்பந்தத்தின் அடிப்படையில் கேரளத்திற்கு 19.750 டி.எம்.சி தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும். இதில் 12.500 டி.எம்.சி. தண்ணீர் கேரள மாநிலத்திற்கு சோலையாறு அணையிலிருந்து கேரளாவில் உள்ள சோலையாறு மின் திட்டத்திற்கு கொடுக்க வேண்டும். மீதமுள்ள 7.250 நீரினை மணக்கடவு வழியாக ஆண்டுதோறும் கொடுக்க வேண்டும்.

இத்திட்டம் 07.10.1961 அன்று அன்றைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அப்போது அவர் இத்திட்டம் விவசாயத் திற்கும், மின் உற்பத்திக்கும் பயன்படும் அற்புதத்திட்டம் என்றும், நைல்நதி எகிப்தை வளப்படுத்துவதுபோல் இந்தத்திட்டம் கோவை மாவட்டத்தை வளப்படுத்தும் எனக்கூறினார். (இன்றைய கோவை, திருப்பூர் மாவட்டங்கள்).

பரம்பிக்குளம் - ஆழியார் திட்டம் அணைக்கட்டுகள் விபரம்

மேல்நீராறு அணை

நீராறு கட்டமலைப் பகுதியில் உற்பத்தியாகி பின் கல்லார் என்ற பெயரில் இடமலை ஆற்றில் கலக்கிறது. இடமலையாறு பெரியாறு நதியின் கிளையாகும். இச்சிற்றணை பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் அனைத்து அணைகளையும் விட உயரமான இடத்தில் 1158 மீ (3800 அடி) கட்டப்பட்டுள்ளது. 29 சதுர மைல் சுற்றளவு பரப்பில் நீர்ப்பிடிப்பு ஒன்று சேரும் நீர் சுரங்கப்பாதை மூலமாக சோலையார் படுகைக்கு கொண்டு வரப்படுகிறது.

மேல்நீரார் சிற்றணை : (மதிப்பீடு 201 லட்சம்)

வடிகால் பரப்பு	: 29 சதுர மைல்
உச்ச வெள்ள அளவு	: 1069 க.மீ / வினாடிக்கு (37760 க.அடி/வி)
உச்ச நீர் மட்டம்	: 1158 மீ (3800 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	: 1245 மி.க.மீ. (38 மி.க.அடி)
உச்ச நீர்ப்பரப்பு	: 0.07 சதுர மைல்
அஸ்திவார மட்டம்	: 1133.66 மீ (3720 அடி)
அணையின் உயரம்	: 25.90 மீ (85 அடி)
கல்லணையின் நீளம்	: 27.43 மீ (90 அடி)
அணையின் உச்ச மட்டம்	: 1159.50 மீ (3805 அடி)
வெள்ள வழிப்பாதை (9.75x4.5மீ)	: 4 எண்கள்
ஆற்றுப்படுகை மதகு (1.50x1.80மீ)	: 2 எண்கள் 3740 அடி

கீழ்நீராறு அணை

கீழ்நீரார் அணையானது மேல்நீரார் சிற்றணையிலிருந்து 8 கி.மீ. தூரம் கீழே தள்ளி, நீராற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இதில் தேங்கும் நீர் சோலையார் படுகைக்கு சுரங்கம் மூலம் கொண்டுவரப்படுகிறது.

கீழ்நீரார் அணை : (மதிப்பீடு 523 லட்சம்)

வடிகால் பரப்பு	:	37.2 சதுர மைல்
உச்ச வெள்ள அளவு	:	1303 மி.க.மீ / வினாடிக்கு (46020 க.அடி / வினாடிக்கு)
உச்ச நீர் மட்டம்	:	1021 மீ (3350.23 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	:	7.75 மி.க. மீ. (274 மி.க.அடி)
அணையின் உச்ச உயரம்	:	43.00 மீ (141 அடி)
அணையின் நீளம்	:	188.90 மீ (620 அடி)
அணையின் உச்ச மட்டம்	:	1024 மீ மீ(3360.07 அடி)
பயன்படா கொள்ளளவு	:	2.8 மி.க.மீ (100 மி.க.அடி)
பயன்படும் கொள்ளளவு	:	4.95 மி.க.மீ (174 மி.க.அடி)

சோலையாறு நீர்த்தேக்கம்

சாலக்குடி ஆற்றின் கிளை ஆறான சோலையாற்றின் குறுக்கே 1002.62 மீ (3290 அடி) உயரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள சோலையார் அணை 152.62 மி.க.மீ. (5392 மி.க.அடி) கொள்ளளவு கொண்டது. சோலையாறு அணை தான் தமிழ்நாட்டில் உள்ள அணைகளில் மிகவும் உயரமான அணையாகும் சோலையார் அணை 105.5மீ (345 அடி) உயரமும் 47 சதுரமைல் வடிகால் பரப்பும் கொண்டது. சோலையார் அணையிலிருந்து சுரங்கம் மூலமாகக் கொண்டு வரப் படும் நீரின் மூலம் இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் இயக்கப் படுகின்றன. சோலையார் மின் நிலையம் எண் 1ல் 70 மெகாவாட் மின்சக்தியும், சோலையார் மின்நிலையம் எண் 2ல் 25 மெகாவாட் மின்சக்தியும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

சோலையார் அணை : (மதிப்பீடு 1120 லட்சம்)

வடிகால் பரப்பு	:	47 சதுர மைல்
உச்ச வெள்ள அளவு	:	1592 மி.க.மீ / வினாடிக்கு
		(15492 மி.க.மீ / வினாடிக்கு)
உச்ச நீர் மட்டம்	:	1003 மீ (3290 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	:	153 மி.க. மீ. (5392 மி.க.அடி)
உச்ச நீர் பரப்பு	:	2.03 ச.மைல்
உச்ச உயரம்	:	105 மீ (345 அடி)
அணையின் நீளம்	:	1244 மீ (4082 அடி)

பரம்பிக்குளம் நீர்த்தேக்கம்

பரம்பிக்குளம் ஆறு ராமகிருஷ்ண மலைப்பகுதியில் உற்பத்தியாகி இறுதியில் சாலக்குடி ஆற்றில் சேருகிறது. இதன் வடிகால் பரப்பு தமிழ்நாடு, கேரளா ஆகிய இருமாநிலங்களிலும் அமைந்துள்ளது. இந்நீர்த்தேக்கம் கேரள காடுகள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தி லேயே முதன்மையானதும் கொள்ளளவில் பெரியதுமான இந்நீர்த் தேக்கம் 504.38 மி.க.மீ. (17820 மி.கன அடி) நீரைத் தேக்கும் வகையில் அமைந்துள்ளது. மேற்கு நோக்கிச் செல்லும் இந்த பரம்பிக்குளம் ஆற்று நீர் இந்நீர்த் தேக்கத்திலிருந்து கிழக்கே திருப்பப்பட்டு சுரங்கம் மூலமாக தூணக் கடவு, பெருவாரிப் பள்ளம் அணைகளை அடைந்து, மின் உற்பத்தி செய்த பின் கால்வாய்கள் மூலமாக ஆழியாறு மற்றும் திருமூர்த்தி அணைகளை அடைந்து பின் அங்கிருந்து சமவெளிப்பகுதிக்கு வருகிறது.

பரம்பிக்குளம் அணை : (மதிப்பீடு 357.50 லட்சம்)

வடிகால் பரப்பு	: 88.8 சதுர மைல்
உச்ச வெள்ள அளவு	: 1686 மி.க.மீ / வினாடிக்கு (59580 மி.க.மீ / வினாடிக்கு)
உச்ச நீர் மட்டம்	: 556 மீ (1825 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	: 504 மி.க. மீ. (17820 மி.க.அடி)
உச்ச நீர் பரப்பு	: 8 சதுர மைல்
அணையின் (கல்லணை) நீளம்:	318 மீ (1044 அடி)

தூணக்கடவு நீர்த்தேக்கம்

அணையின் மொத்தக் கொள்ளளவு 15.76 மி.க.மீ. (557 மி.கன அடி) ஆகும். இவ்வணையின் நீர்ப்பிடிப்புபரப்பு 22 சதுர மைல்கள் ஆகும். இங்கு ஆண்டுதோறும் சுமார் 70 அங்குலம் மழை பெய்கிறது. இது ஒரு சமநிலை நீர்த்தேக்கம் ஆகும். சர்க்கார்பகுதி மின் சுரங்கப்பாதைக்கு நீரைத் திருப்பி அனுப்பு வதற்காகவே இவ்வணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணை பரம்பிக் குளம் நீர்த்தேக்கத்தில் இருந்து நீரைப் பெருவதுடன் வடமேற்குப் பக்கமாக அமைந்துள்ள பெருவாரிப் பள்ளம் நீர்த்தேக்கத்தில் இருந்தும் நீரைப் பெறுகிறது.

தூணக்கடவு அணை : (மதிப்பீடு 58.50 லட்சம்)

வடிகால் பரப்பு	:	1674 சதுர மைல்
உச்ச நீர் மட்டம்	:	539 மீ (1770 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	:	16 மி.க. மீ. (557 மி.க.அடி)
உச்ச நீர் பரப்பு	:	1.67 சதுர மைல்
அணையின் நீளம்	:	338 மீ (1108 அடி)
அணையின் உயரம்	:	26 மீ (85 அடி)

பெருவாரிப்பள்ளம் நீர்த்தேக்கம்

பெருவாரிப்பள்ளம் நீர்த்தேக்கமும் தூணக்கடவு நீர்த்தேக்கமும் ஒன்றோடொன்று நேரடியாக இணைக்கப்பட்டு உள்ளன. 466.26 மீ (1530 அடி) நீளமுள்ள இந்த மண் அணையின் மொத்தக் கொள்ளளவு 17.55 க.மீ (620 மி.கன அடி) ஆகும்.

பெருவாரிப்பள்ளம் அணை : (மதிப்பீடு 32.50 லட்சம்)

வடிகால் பரப்பு	: 61 சதுர மைல்
உச்ச நீர் மட்டம்	: 539 மீ (1770 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	: 18 மி.க. மீ. (620 மி.க.அடி)
உச்ச நீர் பரப்பு	: 1.12 சதுர மைல்
அணையின் நீளம்	: 466 மீ (1530 அடி)
அணையின் உயரம்	: 27 மீ (91 அடி)

ஆழியாறு நீர்த்தேக்கம்

மொத்தம் 76 சதுரமைல்களை நீர்ப்பிடிப்பும் பரப்பாகக் கொண்டுள்ள இந்நீர்த் தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவு 109.37 மி.க.மீ (3864 மி.கன அடி) ஆகும். இந்நீர்த் தேக்கத்திலிருந்து வேட்டைக்காரன் புதூர்க்கால்வாய், பொள்ளாச்சிக் கால்வாய் என்ற இரண்டு கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளது. இவ்வணை ஆழியாற்றின் வரும் வெள்ளத்தைச் சேமித்து வைத்து, தற்போதுள்ள பாசனப் பகுதிகளின் தேவைகளையும் கேரளத்தின் 8097 ஹெக்டேர் (20,00 ஏக்கர்) தமிழ் நாட்டில் 2576 ஹெக்டேர் (6366 ஏக்கர்) பாசனப் பரப்புகளை பூர்த்தி செய்கிறது. பழைய ஆயக்கட்டின் 6366 ஏக்கர் நிலங்கள் 5 பழைய வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறுகிறது. ஆழியாறு தமிழ் நாட்டில் 37 கி.மீ பயணம் செய்து, இறுதியாக கேரள மாநிலத்தில் செல்லும் பாரதப்புழா ஆற்றில் கலக்கிறது.

ஆழியாறு அணை : (மதிப்பீடு 300.50 லட்சம்)

வடிகால் பரப்பு	: 76 சதுர மைல்
உச்ச நீர் மட்டம்	: 320 மீ (1050 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	: 109 மி.க. மீ. (3864 மி.க.அடி)
உச்ச நீர் வெள்ள அளவு	: 1159 மி.க. மீ. / வினாடிக்கு (40957க.அடி / வி)
உச்ச நீர் பரப்பு	: 2.51 சதுர மைல்
அணையின் நீளம்	: 3200 மீ (10500 அடி)
வெள்ள வழிப்பாதை (9 மீ x 3 மீ)	: 11 எண்கள்

திருமூர்த்தி நீர்த்தேக்கம்

பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்நீர்த்தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவு 1935 மி. கனஅடி ஆகும். சமநிலைக் கோட்டுக் கால்வாய் மூலம் நீரைப்பெறும் இந்நீர்த்தேக்கத்திலிருந்து பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயும், உடுமலைப்பேட்டைக் கால்வாயும் பிரிந்து செல்கின்றன. சுமார் 1,51,690 ஹெக்டேர் (3, 77,152 ஏக்கர்) பாசனம் கொண்ட பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் நீளம் 124 கி.மீ. ஆகும். இதுவே இத்திட்டத்தில் மிகப்பெரிய கால்வாயாகும். இந்த அணை பாலாற்றின் தளி பகுதியில் பழைய ஆயக்கட்டான 1190 ஹெக்டேர் (2940 ஏக்கர்) நிலங்களையும் நிலையான பாசனம் செய்யப் பயன் படுகிறது. இதிலிருந்து ஒரு உயர்மட்டக் கால்வாய் வெட்டப்பட்டு அதன் மூலம் 1003 ஹெக்டேர் (2477 ஏக்கர்) பாசன வசதி பெறுகிறது. மேலும் அணையின் நீர்மட்டம் குறையும் பொழுதும், உயர் மட்டக் கால்வாயின் பாசனப் பகுதிகள் பாதிக்கா வண்ணம் சமநிலைக் கோட்டுக் கால்வாயிலிருந்து குழாய் மூலம் நேரடியாக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

திருமூர்த்தி அணை : (மதிப்பீடு 235 லட்சம்)

வடிகால் பரப்பு	:	31 சதுர மைல்
உச்ச நீர் மட்டம்	:	407 மீ (1337 அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	:	590 மி.க. மீ. (1935மி.க.அடி)
உச்ச நீர் பரப்பு	:	1.5 சதுர மைல்
உச்ச நீர் வெள்ள அளவு	:	448 மி.க. மீ. / வினாடிக்கு (15.820 க.அடி / வினாடிக்கு
அணையின் நீளம்	:	2680 மீ (8792 அடி)
வெள்ள வழிப்பாதை (7.90 மீ x 3.70 மீ)	:	5 எண்கள்

மேல் ஆழியாறு நீர்த்தேக்கம்

ஆழியாற்றின் குறுக்கே 265 மீட்டர் நீளமுள்ள இந்நீர்த்தேக்கம் ஆழியாறு நீர்த்தேக்கத்திற்குச் சிறிது மேலே கட்டப்பட்டுள்ளது. இது முக்கியமாக ஆழியாறு மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி செய்வதற்காகவே கட்டப்பட்டதாகும். மொத்தம் 54.2 சதுரமைல் நீர்ப்பிடிப்புப் பரப்பினை கொண்ட இவ்வணையின் கொள்ளளவு 938 மி.கன அடி ஆகும். மின் உற்பத்தி செய்த பின்னர் இவ்வணையிலிருந்து செல்லும் நீர் ஆழியாறு அணையை அடைகிறது.

மேல் ஆழியாறு அணை

வடிகால் பரப்பு	:	54.2 சதுர மைல்
உச்ச வெள்ளம்	:	1530 மி.க.மீ / வினாடிக்கு (54000 க.அடி / வினாடிக்கு
உச்சநீர்மட்டம்	:	770 மீ. (2525 மி.க.அடி)
உச்சநீர்மட்ட கொள்ளளவு	:	27 மி.க. மீ. (938 மீ.க.அடி)
உச்ச நீர் பரப்பு	:	1.5 சதுர மைல்
அணையின் நீளம்	:	315 மீ (1035 அடி)
அணையின் உச்ச உயரம்	:	81 மீ (265 அடி)
வெள்ள வழிப்பாதை (12.12 மீ x 9.90 மீ)	:	2 எண்கள்

இடைமலையாறு அணை

இடைமலையாறு அணையானது இடைமலையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் ஆனைமலை மலைத்தொடரில் கடல் மட்டத்திலிருந்து 2500 மீட்டர்கள் (8270 அடி) உயரத்தில் அமைந்துள்ளது. கேரள மாநிலத்தின் பெரியாறு நதியின் துணையாறு ஆகும். இந்த அணை 373 மீட்டர் (1264 அடி) நீளமுடையது. 28.3 சதுர கிலோ மீட்டர்கள் வனப்பகுதியில் இருந்து வரும் நீரானது இங்கு சேமிக்கப்படுகிறது. இந்த அணையிலிருந்து 75 மெகாவாட் (37.5 மெகாவாட் x 2) மின்சாரம் எடுக்கப்படுகிறது. இந்த அணையாது கேரள மின்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இடைமலையாறு அணைத்திட்டம் 1970 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்குப் பின் 1980 ஆம் ஆண்டு முற்றுப்பெற்றது.

அணையின் பெயர் : இடைமலையாறு அணை

இருப்பிடம் : எர்ணாகுளம் மாவட்டம், கேரளா
10°13’18”N 76°42’21”E
10.22167°N 76.70583°E

துவக்கப்பட்ட ஆண்டு : 1970

அணை திறக்கப்பட்ட நாள் : 1985

திட்ட மதிப்பீடு : 539.5 கோடிகள்

அணையின் உயரம் : 102.8 மீட்டர்கள் (337.3 அடி)

அணையின் நீளம் : 373 மீட்டர் (1224 அடி)

நீர் கொள்ளளவு : 1.0898 CUBKM

நீர் பிடிப்புப் பகுதி : 381 சதுர கிலோமீட்டர் (147 சதுர மைல்)

நீர் மின் திட்டம் : கேரள மின் வாரியம்

டர்பன் எண்ணிக்கை : 2x37.5 மெகாவாட்

பயன்பெறும் மாவட்டம் : எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், கோட்டயம்.

உப்பாறு நீர்த்தேக்கம்

வலது கரை மதகு

அமைப்பு தூரம்	-	5610 அடி
பாசனப்பரப்பளவு	-	2516 ஏக்கர்
நீர் ஓட்டஅளவு விநாடிக்கு	-	72.00 கனஅடி
கண்வாய் கீழ்மட்டம்	-	882.00அடி
கண்வாய் அளவு	-	3.0 X 4.0
மதகுப்பலகை அளவு	-	4.0 X 5.0
கணவாய் நீளம்	-	94.3
இயக்கு மேடை மட்டம்	-	916.00 அடி
வேலை துவங்கிய ஆண்டு	-	1965
வேலை முடிந்த ஆண்டு	-	1968


இடது கரைக்கால்வாய்

பாசனப்பரப்பளவு	-	5535 ஏக்கர்
நீர் ஓட்ட அளவு விநாடிக்கு	-	105.62 கனஅடி
கண்வாய் கீழ்மட்டம்	-	882.00அடி
கண்வாய் அளவு	-	3.0 X 4.0
வேலை துவங்கிய ஆண்டு	-	1965
வேலை முடிந்த ஆண்டு	-	1968
மதகுப்பலகையின் அளவு	-	4.0 X 5.0
கணவாய் நீளம்	-	94.3
இயக்கு மேடை மட்டம்	-	916.00 அடி


பரம்பிக்குளம்- ஆழியார் திட்டம் கால்வாய்கள்

வ. எண்.	கால்வாய்	முதன்மைக் கால்வாய் நீளம் கி.மீ	கிளைக் கால்வாய்கள் நீளம் கி.மீ	பாசனப் பரப்பு	
				ஏக்கர்	ஹெக்டேர்
1.	ஆழியார் ஊட்டுக்கால்வாய்	13.40	62.90	4665	1888.66
2.	சேத்துமடைக்கால்வாய்	8.40	25.89	5.044	2042.10
3.	வேட்டைக்காரன்புதூர் கால்வாய்	17.40	45.00	11181	4526.72
4.	பொள்ளாச்சி கால்வாய்	48.00	112.00	23488	9509.31
5.	திருமூர்த்தி அணை உயர்மட்ட கால்வாய்	10.89	---	2477	1002.83
6.	பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய்	124.00	1012.00	316383	128090.00
7.	உடுமலைப்பேட்டைக் கால்வாய்	30.40	73.00	58292	23600.00
8.	ஆழியாறு பழைய வாய்க்கால்கள்	48.73	----	6366	2576.00
9.	தளி வாய்க்கால்கள்	68.87	---	2940	1190.34


PARAMBIKULAM ALIYAR BASIN MAP




Source: Institute of Water Studies



INDEX MAP
(UDUMALPET CANEL SUB-DIVISION)
NOT TO SCALE
DHARAPURAM TALUK
(ERODE DISTRICT)
UDUMALPET TALUK
(COIMBATORE DISTRICT)
POLLACHI TALUK
(COIMBATORE DISTRICT)
UDUMALPET
DHALI
THIRUMURTHI RESERVOIR
CONTOUR CANAL
REFERENCE
Main canal & Branch canal
Road and cart track
Distributories
PMC & AMC
Railway track
Taluk boundary


பாரதப்புழா ஆறு வடிநிலம்



இடைமலையாறு அணை அமைவிடம்




கேரள எல்லை
நல்லாறு அணை திட்டம்
பரம்பிக்குளம் அணை
சோலையாறு அணை
கீழ் நீராறு அணை
மேல் நீராறு அணை
மேல் ஆழியாறு அணை
ஆழியாறு அணை
நல்லாறு அணை உள்ள இடம்
திருமூர்த்தி அணை
ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்
சோலையாறு மின் உற்பத்தி நிலையம் - 1
சோலையாறு மின் உற்பத்தி நிலையம் - 2
காண்டூர் கால்வாய்
ஆழியாறு பீடர் கால்வாய்


ஆனைமலையாறு அணை திட்டம்
கேரள சோலையாறு அணை
சோலையாறு அணை
சோலையாறு மின் உற்பத்தி நிலையம் -2
சோலையாறு சுரங்கப்பாதை
சோலையாறு மின் உற்பத்தி நிலையம் -1
பரம்பிக்குளம் அணை
பரம்பிக்குளம் சுரங்கப்பாதை
தூணக்கடவு அணை
பெருவாரிப்பள்ளம் அணை
சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம்
சர்க்கார்பதி மின் உற்பத்தி சுரங்கப்பாதை
காண்டூர் கால்வாய்
ஆழியாறு பீடர் கால்வாய்
ஆழியாறு அணை
மேல் ஆழியாறு அணை
ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்
நவமலை சுரங்கப்பாதை
திருமூர்த்தி அணை
பரம்பிக்குளம் மெயின் கால்வாய்
உடுமலை
கீழ் நீராறு சுரங்கப்பாதை
கீழ் நீராறு அணை
மேல் நீராறு சுரங்கப்பாதை
மேல் நீராறு அணை

பரம்பிக்குளம் - ஆழியார் - சுரங்கங்களின் விபரங்கள்

வ. எண்.	பெயர்	குதிரை லாட வடிவம்	நீளம்	கொள்ளளவு
1	மேல்நீரார் சுரங்கம்	6 மீ (20'0")	4266 மீ (14000 அடி)	74 மிகமீ (2600 க.அடி/வி
2	கீழ்நீரார் சுரங்கம்	6.7 மீ (22'0")	8129 மீ (26664 அடி)	62 மிகமீ (2200 க.அடி/வி
3	சோலையார் சுரங்கம்	3.2 மீ (10'6")	2557 மீ (8390 அடி)	24 மிகமீ (850 க.அடி/வி
4	பரம்பிக்குளம் சுரங்கம்	5.1 மீ (16'9")	2495 மீ (8186 அடி)	37 மிகமீ (1400 க.அடி/வி
5	சர்க்கார்பதி சுரங்கம்	3.65 மீ (12'0")	3850 மீ (12635 அடி)	37 மிகமீ (1400 க.அடி/வி
6	நவமலைச் சுரங்கம்	4.34 மீ (14'3")	4853 மீ (15925 அடி)	33 மிகமீ (1150 க.அடி/வி

பரம்பிக்குளம் - ஆழியார் மின் உற்பத்தி

இத்திட்டத்தில் மொத்தம் 6 மின்உற்பத்தி நிலையங்கள் உள்ளன. மொத்த மின் உற்பத்தி 189.05 மெகாவாட் ஆகும்.

சோலையார் மின் உற்பத்தி நிலையம் எண் (1). 396 மீ (1300 அடி) நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தி 70 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப் படுகின்றது.

சோலையார் மின் உற்பத்தி நிலையம் எண் (2). 171 மீ (560 அடி) நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தி 25 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

சர்க்கார்பதி மின் நிலையம்

சுமார் 104 மீ (340 அடி) நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தி 30 மெகா வாட் மின்சக்தியை உற்பத்தி செய்யவும் இத்திட்டத்திற்கு நீர் தூணக் கடவு அணையிலிருந்து சுரங்கம் மூலமாக வருகிறது.

ஆழியாறு மின் நிலையம்

சுமார் 427 மீ (1400 அடி) நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தி 60 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யும் இத்திட்டத்திற்கு மேல் ஆழியாறு அணையிலிருந்து நீர் வருகிறது.

ஆழியாறு அணை குறு புனல் மின்நிலையம்

ஆழியாறு அணையிலிருந்து ஆற்றில் திறந்து விடும் தண்ணீரை பயன்படுத்தி 2.50 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

திருமூர்த்தி அணை குறு புனல் மின்நிலையம்

திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் பிரதான கால் வாயில் திறந்து விடும் தண்ணீரை பயன்படுத்தி 2.00 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

சமநிலைக் கோட்டுக் கால்வாய் – காண்டூர் கால்வாய்

49.30 கி.மீ. நீளமுள்ள கால்வாய் வினாடிக்கு 350 க.மீ (1150 க.அடி) நீரைக் கொண்டு செல்லும் இக்கால்வாய் தென்னகத்திலேயே ஈடு இணையற்றதாகும். இக்கால்வாய் வெட்டி முடிக்கப்பட்ட பணி பொறியியல் வரலாற்றில் ஒரு தலைசிறந்த சாதனையாகக் கருதப் படுகிறது. சர்க்கார்பதி மின் நிலையத்திலிருந்து வரும் நீரை திரு மூர்த்தி அணைக்கு கொண்டு சென்று சுமார் 3.77 இலட்சம் ஏக்கர் ஆயக்கட்டுப் பரப்பிற்கு பாசன வசதி அளிப்பது இக்கால்வாயின் பிரதானப் பணியாகும்.

நீர் வரவு

தமிழ்நாடு – கேரள அரசுகளின் ஒப்பந்தப்படி அதன் அனைத்து அம்சங்களும் பூர்த்தி செய்யப்பட்டால் தமிழ்நாட்டுக்கு 30.5 ஆயிரம் மி.கன அடி நீர் பெறுவது சாத்தியமாகும். அதன் விவரம் கீழ்வருமாறு

1. மேல் நீரார் அணை	:	9.00 டி.எம்.சி
2. கீழ் நீரார் அணை	:	2.50 டி.எம்.சி
3. சோலையார் அணை	:	2.50 டி.எம்.சி
4. பரம்பிக்குளம், தூணக்கடவு பெரிவாரிப்பள்ளம் அணைகள்	:	14.00 டி.எம்.சி
5. ஆனைமலையாறு அணை	:	2.50 டி.எம்.சி
மொத்தம்	:	30.50 டி.எம்.சி

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தில் உள்ள பாசன குளங்கள்

1. ஆழியாறு படுகை

கொளப்பத்துக் குளம்

பாசனப் பரப்பு	:	249.44 ஹெக்டேர் (616.11 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.863 மி.கன மீட்டர் (30.50 மி.கன அடி)
வருட மொத்தக் கொள்ளளவு	:	2.59 மி.கன மீட்டர் (91.50 மி.கன அடி)
கலிங்கல் நீளம்	:	36.87 மீட்டர் (121 அடி)
மதகுகள்	:	2
நீர்வரத்து ஆதாரம்	:	உப்பாறு

2. பாலார் படுகை

எலவக்கரை குளம்

பாசனப்பரப்பு	:	101.43 ஹெக்டேர் (250.54 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.321 மி.கன மீட்டர் (11.34 மி.கன அடி)
வருட மொத்தக் கொள்ளளவு	:	0.963 மி.கன மீட்டர் (34.02 மி.கன அடி)
கலிங்கல் நீளம்	:	25.29 மீட்டர் (83 அடி)
மதகுகள்	:	4
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

ஒட்டுக்குளம்

பாசனப் பரப்பு	:	172.87 ஹெக்டேர் (427 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.40 மி.கன மீட்டர் (14.11 மி.கன அடி)
வருட மொத்தக் கொள்ளளவு	:	0.963 மி.கன மீட்டர் (34.02 மி.கன அடி)

கொள்வாங்கள் நீளம் (மூன்று)	:	1. 50.90 மீ
		2. 51.21 மீ
		3. 2.44 மீ
மதகுகள்	:	5
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

பெரியகுளம்

பாசனப்பரப்பு	:	472.87 ஹெக்டேர் (1168 ஏக்கர்)
கொள்ளளவு	:	2.00 மி.கன மீட்டர் (70.56 மி.கன அடி)
கொள்வாய்கள் நீளம் (இரண்டு)	:	1. 1.67 மீ
		2. 55.50மீ
மதகுகள்	:	8
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

செங்குளம்

பாசனப்பரப்பு	:	115.38 ஹெக்டேர் (285 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.36 மி.கன மீட்டர் (12.76 மி.கனஅடி)
கொள்வாய்கள் நீளம் (இரண்டு)	:	1. 24.38 மீ
		2. 29.56 மீ
மதகுகள்	:	4
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

செட்டிகுளம்

பாசனப்பரப்பு	:	92.31 ஹெக்டேர் (228 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.22 மி.கன மீட்டர் (7.93 மி.கன அடி)
கொள்வாய்கள் நீளம் (இரண்டு)	:	1. 2.13 மீ
		2. 2.44 மீ

மதகுகள்	:	2
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

திணைக்குளம்

பாசனப்பரப்பு	:	81.38 ஹெக்டேர் (201 ஏக்கர்)
கொள்ளளவு	:	205 மி. கன மீட்டர் (7.23 மி. கன அடி)
கொள்வாய் நீளம்	:	15.24 மீ
பாசன மதகுகள்	:	2
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

கரிசல்குளம்

பாசனப்பரப்பு	:	78.95 ஹெக்டேர் (195 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.083 மி.கன மீட்டர் (2.92 மி.கன அடி)
கொள்வாய்கள் நீளம் (இரண்டு)	:	1. 4.27 மீ 2. 11.58மீ
பாசன மதகுகள்	:	2
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

அம்மாபட்டி குளம்

பாசனப்பரப்பு	:	56.28 ஹெக்டேர் (139 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.05 மி.கன மீட்டர் (1.76 மி.கன அடி)
கொள்வாய்கள் நீளம்	:	1.36 மீ
பாசன மதகுகள்	:	3
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

வலையபாளையம் குளம்

பாசனப் பரப்பு	:	57.95 ஹெக்டேர் (143.13 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.22 மி. கன மீட்டர் (7.79 மி. கன அடி)
கொள்வாய்கள் நீளம்	:	9.80 மீ
பாசன மதகுகள்	:	4
நீர்வரத்து ஆதாரம்	:	பாலாறு

3. மழை நீர் ஆதாரம்

தேவம்பாடிவலசு குளம்

பாசனப்பரப்பு	:	218.31 ஹெக்டேர் (539.22 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.19 மி.கன மீட்டர் (6.80 மி.கன அடி)
வருடமொத்தக் கொள்ளளவு	:	0.56 மி.கன மீட்டர் (19.80 மி.கன அடி)
கலிங்கல் நீளம்	:	18.28 மீட்டர்
மதகுகள்	:	2
நீர்வரத்து ஆதாரம்	:	மழைநீர்

கோதவாடி குளம்

பாசனப் பரப்பு	:	126.61 ஹெக்டேர் (312.72 ஏக்கர்)
கொள்ளளவு	:	0.313 மி.கன மீட்டர் (11.07மீ.கன அடி)
வருடமொத்தக் கொள்ளளவு	:	0.94 மி.கன மீட்டர் (33.21 மி.கன அடி)
கலிங்கம் நீளம் (இரண்டு)	:	1. 45 மீட்டர், 2. 121.80 மீட்டர்
மதகுகள்	:	2
நீர்வரத்து ஆதாரம்	:	மழை நீர்.

பூசாரி நாயக்கன் குளம்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1914 ஆம் ஆண்டு தண்ணீர் வரிகட்டிய முதல் குளம் பூசாரிநாயக்கன் குளம்.

திருமூர்த்தி அணை கட்டப்படுவதற்கு முன்பு அமணலிங்கேஸ்வரர் கோயிலுக்கு சற்று முன்பாக வலது பக்கத்தில் ஒரு தடுப்பணை இருந்தது. இத்தடுப்பணை தற்போது சிதிலமடைந்து உள்ளது. இத்தடுப்பணையில் தண்ணீர் வெளியே வருவதற்கு மூன்று குழாய்கள் பதிக்கப் பட்டு இருந்தது. மேற்புறம் குழாய் வழியாக வரும் நீரானது பாலாறு செல்வதற்கும், நடுவில் உள்ள குழாயில் இருந்து ஏழு குளம் பாசனத்திற்கும், கீழ்ப்புறம்

குழாய் வழியாக வரும் நீரானது ஆலாம்பாளையம் கிராமத்தில் உள்ள பூசாரிநாயக்கன் ஏரிக்கும் வரும் வகையில் அமைக்கப் பட்டிருந்தது. திருமுர்த்தி அணை கட்டடப்படுவதற்கு முன்பு பூசாரி நாயக்கன் குளத்திற்கு வரும் நீர்வரத்து அதிகமாக இருந்தது. திருமூர்த்தி அணை கட்டப்பட்ட பின்பும் பள்ளங்களில் இருந்து வரும் நீரானது இக்குளத்திற்கு நீராதாரமாக இருந்தது. இதன் காரணமாக திருமூர்த்தி அணையில் இருந்து வரும் நீரை இவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. மழை வரவு குறைந்து உள்ள சூழ்நிலையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது இவர்கள் தங்களுக்கான உரிமையை கேட்டு நீதிமன்றம் சென்றனர். மூணாறு சாலை விரிவாகத்தின்போதும், தளி, குறிச்சிக்கோட்டை சாலை விரிவாக்கத்தின்போதும் பூசாரி நாயக்கன் குளத்திற்கு தண்ணீர் வரும் வாய்க்கால்கள் முற்றிலும் சிதிலமடைந்து விட்டன.

தளி எத்தலப்பநாயக்கருடைய மருமகன் பெயர் பூசாரி நாயக்கன். 1800 ஆம் ஆண்டு இக்குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி உள்ளார். இக்குளத்தில் உள்ள நீர் வெளிவரும் தூம்பு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்படடது.

நல்லாறு அணை கட்டுவதற்கு சுரங்கப்பாதை அமைப்பதன் மூலம் ஆண்டுக்கு 150 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். தண்ணீர் தமிழ்நாட்டிற்கும், மின்சாரம் கேரளாவிற்கும் என்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டாலும் கொங்கு மண்டலத்திற்கு கூடுதலாக தண்ணீர் கிடைக்கும்.

ஏன் வேண்டும்

ஆனைமலையாறு நல்லாறு திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலையின் காரணமாக தமிழகம் மழை மறைவுப் பிரதேசத்தில் உள்ளது. 1921 ஆம் ஆண்டு பொதுப் பணித்துறை பொறியாளராக பணியாற்றிய ஆர்.என்.ஆரோக்கிய சாமி முதலியார் அவர்கள் அதிரப்பள்ளி ஆழியாறு திட்டத்தை கொண்டு வந்தார். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் தமிழகத்திற்கு 75 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்திருக்கும். நிதிப்ப ற்றாக்குறை காரணமாக அன்றைய அரசால் இத்திட்டம் கைவிடப்பட்டது. பின்னர் இத்திட்டம் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் என சுருக்கப்பட்டது.

ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தி சட்டமன்றத்தில் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத் தலைவர் மறைந்த பேராசிரியர் என்.எஸ்.பழனிச்சாமி அவர்கள் உரையாற்றியுள்ளார்.

ஆனைமலையாறு அணைக்கட்டுத் திட்டம்

ஆனைமலையாற்றின் குறுக்கே அணை கட்டுவதின் மூலம் 2.5 டி.எம்.சி. தண்ணீர் ஒவ்வொரு வருடமும் நமக்குக் கிடைக்கும். இத்திட்டத்திற்கு தமிழ்நாடு கேரள அரசாங்கம் ஒப்பந்தப்படி ஒப்புக்கொண்ட போதிலும் இதுவரை நிறைவேற்றப் படவில்லை. காரணம், கேரளா முன்பு எடுத்துக் கொண்டுள்ள இடமலையாறு திட்டத்தை நிறைவேற்றிய பின்னர்தான் ஆனைமலையாறு திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்பது ஒப்பந்தத்திலுள்ள ஷரத்து. இடமலையாறு திட்டம் 1990 ஆம் ஆண்டே கேரள அரசால் பூர்த்திசெய்யப்பட்ட போதிலும் ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

பரம்பிக்குளம் ஆழியார் இரு மாநில நதிநீர் ஒப்பந்தத்தின்கீழ் ஆனைமலையாற்றில் அணை கட்டி தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திருப்பி விடும் திட்டம் உள்ளது. தமிழ்நாடு, கேரளா இரு மாநிலங்களுக்கிடையே உள்ள பரம்பிக்குளம் ஆழியார் ஒப்பந்தத்தின் கீழ் 30.5 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டு பாசனத்திற்காக கிடைக்கப்பெற வேண்டும். தற்போது 28 டி.எம்.சி. தண்ணீர் திருப்பப்படுவதற்கு தேவையான பணிகள் முடிக்கப் பட்டு தண்ணீர் பெறப்படுகிறது. மீதமுள்ள 2.5 டி.எம்.சி தண்ணீர் ஆனைமலை ஆற்றிலிருந்து கிடைக்கப்பெற வேண்டும். இதற்கான சிற்றணை குடை வழி முதலான பணிகளை கேரள அரசுடன் துணை ஒப்பந்தம் செய்த பின்னர் செயல்படுத்த வேண்டும்.

பரம்பிக்குளம் ஆழியார் ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்ய இரு மாநிலங்களுக்கு இடையே 1988 ஆம் ஆண்டு நவம்பர் முதல் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகின்றது. ஆனைமலை ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு கேரள அரசிடம் துணை ஒப்பந்தம் செய்து கொள்ள தமிழ்நாடு அரசு தொடர் முயற்சி எடுத்து வருகிறது. பரம்பிக்குளம் ஆழியார் திட்ட ஒப்பந்த மறு ஆய்விற்கான கூட்டம் தலைமைச் செயலாளர்கள் நிலையில் கடைசியாக 21.01.2011 அன்றும் மாண்புமிகு அமைச்சர்கள் நிலையில் 28.04.2013 அன்றும் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.

கேரள அரசு இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையினை தமிழக அரசுக்கு அனுப்பியுள்ளது. அவ்வறிக்கை இத்துறையினால் ஆய்வு செய்யப் பட்டு அதன் மீதான இத்துறையின் அறிக்கை தலைவர், காவேரி தொழில்நுட்பக் குழு மற்றும் பன் மாநில நதிநீர்ப்பங்கீடு பிரிவு சென்னை அவர்களுக்கும் தலைமைப் பொறியாளர் அலுவலக கடித எண் தவஅ / முவஅ1 / 25378 / 80 / நாள் 17.01.2014 இல் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் மூலம் 1983 – 84 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு மற்றும் கேரளா அரசு

தற்போது அளித்துள்ள அறிக்கை ஆகிய இரண்டையும் ஆராய்ந்து, ஆனைமலையாறு திட்டம் நிறைவேறும் வகையில் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றிட நடப்பு 2017 - 18 ஆம் ஆண்டு விலை விகிதப்படி 585 கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பிடப்படுகிறது.

நல்லாறு நீர்த்தேக்கத் திட்டம்:

மேல்நீராறில் தடுக்கப்படும் தண்ணீரை சோலையாறு வழியாக பரம்பிக்குளம் நீர்த்தேக்கத்திற்கு எடுத்துச் செல்லாமல் நல்லாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டி 7.5 டி.எம்.சி தண்ணீரை தேக்கி வைக்கும் திட்டமே நல்லாறு திட்டமாகும். நீராறு பகுதி தென்னகத்தின் சிரபுஞ்சி என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் சிரபுஞ்சியை அடுத்து இரண்டாவது இடம் வகிக்கிறது. மேல்நீராறு தடுப்பணையிலிருந்து தமிழகத்திற்கு வரக்கூடிய பங்காக 9 டி.எம்.சி நீரை எடுத்துக் கொள்ள வேண்டும். மேல்நீராறில் கட்டப் பட்டிருப்பது ஒரு தடுப்பணை மட்டுமே. நீரை தேக்கும் வசதி இல்லை. நீராறு அணையின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டி சுரங்க வழி மூலம் சோலையாறு அணைக்கு திருப்பி விடப்படுகிறது. அதன்பின்னர் சோலையாறு அணையிலிருந்து பரம்பிக்குளம் அணைக்கு சோலையாறு பவர்ஹவுஸ் சுரங்கப்பாதை மூலமாக இந்த நீரானது பயணித்து தூணக்கடவு அணைக்கு அனுப்பப்படுகிறது. தூணக்கடவிலிருந்து சர்க்கார்பதி பவர்ஹவுசை அடைந்து அங்கிருந்து 52 கி.மீ. நீளமுள்ள காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணையை அடைகிறது. மேல்நீராறிலிருந்து பெறப்படும் நீர் மலைகள் மற்றும் நீண்ட கால்வாய்கள் மூலம் பயணிப்பதாலும் சோலையாறு பரம்பிக்குளம் தூணக்கடவு அணைகளில் ஆவியாவதாலும் காண்டூர் கால்வாயில் ஏற்படும் நீர்க்கசிவினாலும் பெருமளவு நீர் வீணாகிறது.

நீராறு பகுதியில் பெய்யும் மழைநீர் திருமூர்த்தி அணையை அடைவதற்கு நான்கு முதல் ஐந்து நாட்கள் ஆகிறது. நல்லாறு அணை கட்டப்பட்டால் நான்கு மணி நேரத்தில் திருமூர்த்தி அணையை நீர்வந்து சேரும் பெருமழைக்காலங்களில் அதிகமான நீரினை திருமூர்த்தி அணைக்கு கொண்டு சேர்க்க முடியும். இத்திட்டம் நேரடியாக திருமூர்த்தி அணை கட்டுக்கு எடுத்துச் செல்லும் திட்டமாகும்.

நல்லாறு திட்டப்பணிகளுக்கான பொதுப்பணித்துறை மற்றும் மின் வாரியம் கூட்டு முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. 29.12.1989 அன்று நடந்த பரம்பிக்குளம் ஆழியார் ஒப்பந்தம் மறுபரிசீலனை கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, நல்லாறு திட்டத்தின் விவரங்கள் தமிழ்நாடு அரசால் கேரள அரசின் தகவலுக்காகவும் ஆய்விற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்ட முன்னோடி அறிக்கை மத்திய நீர்வள குழுவுக்கும் அனுப்பப்பட்டு மத்திய நீர்வளக்குழுவின் ஆய்வில் உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் மேல் நீராறு அணையிலிருந்து நீரை குகை வழியாக தற்போதுள்ள திருமூர்த்தி அணைக்கு மேல் நல்லாற்றிற்குத் திருப்பி, அதன் குறுக்கே ஒரு அணைகட்டி (7000 மி.க.அடி கொள்ளளவு) இரு நீர்மின் நிலையங்கள் ஏற்படுத்தி மின் உற்பத்தி செய்த பின்னர் வெளியேற்றப்படும் நீரானது திருமூர்த்தி அணைக்கு திருப்பி விட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென தமிழ்நாட்டின் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த திட்டமானது மறு ஆய்விற்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்து கேரள அரசு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் இத்திட்டத்தினால், கேரள அரசிற்கு கிடைக்கக்கூடிய பயன்கள் குறித்த விவரத்தை அவ்வரசின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டது.

இத்திட்டத்தினால் கேரளாவிற்கு கிடைக்கக்கூடிய பயன்கள் குறித்த விபரம் தலைமைப் பொறியாளர் அலுவலக கடித எண் தவஅ / முவஅ1 / கோ.2 / 95 / நாள் 30.03.2012 இல் தலைவர், காவேரி தொழில்நுட்பக் குழு மற்றும் பன்மாநில நதிநீர்ப்பங்கீடு பிரிவு சென்னை – 8 அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட நடப்பு 2017 – 18 ஆம் ஆண்டு விலை விகிதப் படி உத்தேசமாக ரூ.715 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்படுகிறது. இத்திட்டம் நிறைவேற்றினால் கீழ்கண்ட பயன்கள் கிடைக்கும்.

1. தென்மேற்கு பருவமழை காலத்தில் மேல் நீராற்றில் கிடைக்கும் கூடுதல் நீரை வீணாக்காமல் முழுமையாக பயன்படுத்தலாம்.
2. கூடுதல் மின்சார உற்பத்தி செய்யலாம் (250 மெகாவாட்)
3. திருமூர்த்தி அணைக்கு தற்போது நீரை எடுத்துச் செல்லும் தூரம் 200 கி.மீட்டரில் இருந்து கணிசமாகக் குறைவதால் நீர் இழப்பு குறையும்.
4. தற்போதுள்ள சமமட்டக் கால்வாயில் எதிர்பாரா பழுதுகள் ஏற்பட்டு பாசனத் தண்ணீரை கொண்டு வர தடை ஏற்படும் காலங்களில் தற்போது திட்டமிடப்பட்டுள்ள நல்லாறு நீர்த்தேக்கத்திலிருந்து தேவையான நீரினை பாசனத்திற்கு தடையின்றி வழங்கலாம்.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட கழுத்தறுப்புச் சண்டையில் உழவர்களின் ஆற்றலை வீணடிப்பதை தவிர்த்துவிட்டு உடனடியாக ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும்.



உண்மைகள் வெளியாக வேண்டும்

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தின் மூலம்தற்போது கிடைக்கும் நீரை முறையாகப் பயன்படுத்த அரசு தவறிவிட்டது என உழவர் உழைப்பாளர் கட்சி கருத்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இக்கட்சியின் மாநிலப் பொருளாளரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான என்.எஸ்.பழனிச்சாமி கூறியதாவது :

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறும் விவசாய நிலங்கள் 4 மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுமார் 2 ஆண்டுகள் கழித்துத்தான் பாசன நீர் கிடைப்பதற்கான வாய்ப்பு தற்போது உள்ளது. இந்த நீரும் முறையாக பாசனத்திற்குக் கிடைப்பதில்லை. ஒரு வாரம் நீர் வருவதற்குப் பதிலாகப் பலமுறை 2 வாரங்கள் கழித்து ஒரு வாரம் என்ற முறையில் நீர் வருகிறது. இதுவும் முழுமையாகக் கிடைப்பதில்லை. இதனால் ஒரு சாகுபடியைக்கூட விவசாயிகளால் எடுக்க முடியவில்லை.

இத்திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறும் பொள்ளாச்சி, உடுமலை தாலூகாக்களில் ஓரளவு நீர் ஆதாரங்கள் உள்ளன. ஆனால், பல்லடம், பொங்கலூர், திருப்பூர், காங்கயம், வெள்ளகோவில் போன்ற தாலூகாக்கள் வறட்சி நிலவும் பகுதிகளாக உள்ளன. இங்கு மழைப்பொழிவு மிகவும் குறைவு. மேலும் இப்பகுதிகளில் விசைத்தறி உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபட மக்கள் பலரும் சென்று விடுவதால் விவசாய கூலித் தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. விவசாயக் கூலி வேலை பார்க்கும் நிரந்தரத் தொழிலாளர்கள் இப்பகுதியில் மிகவும் குறைவாக உள்ளனர்.

இந்நிலையில் 2 ஆண்டிற்கு ஒருமுறை பி.ஏ.பி. பாசன நீரை நம்பி இப்பகுதி மக்கள் தொடர்ந்து விவசாயம் மேற்கொள்ள முடிவதில்லை.

இங்கு வறட்சி நிலவுகிற போதும் தென்னை வளர்ப்பே பிரதான விவசாயத் தொழிலாக உள்ளது. இதற்குக் காரணம், தென்னை மூலம் நிரந்தர வருவாய் கிடைக்கும் என்ற எண்ணம் விவசாயிகளிடம் உள்ளதுதான். மேலும் இங்கு கிணற்று நீரை நம்பியே விவசாயம் உள்ளது.

எனவே பி.ஏ.பி திட்டத்தின் மூலம் கிடைக்கும் நீரை 4 மண்டலங்களிலும் மாதம் ஒருமுறை சுழற்சி முறையில் வழங்க வேண்டும். அப்போதுதான் இங்குள்ள கிணறுகளில் தொடர்ந்து ஊற்று ஏற்பட்டு வற்றாமல் இருக்கும். இதன்மூலம் விவசாயமும் தொடர்ந்து நடைபெறும். மேலும், மடைவிட்டு மடை நீரை பாசனத்திற்கு அனுப்பும் முறையும் கையாளப்படவேண்டும். முதல் மடை விடும்போது 2 வது மடைக்கு நீர் விடக்கூடாது. 4 வது மடைக்கு நீர் விடாதபோது 3 வது மடைக்கு நீர்விடவேண்டும். முதல் மடை, 3 வது மடைக்கு நீர் விடும்போது 2 வது மடை மற்றும் 4 வது மடைப் பகுதியிலுள்ள கிணறுகளிலும் நீர் ஊற்று ஏற்பட்டு விடும்.

பாசன நீரை முறையாகப் பயன்படுத்த சொட்டுநீர்ப் பாசனத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதன் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வழி ஏற்படும். இதற்கு இப்பகுதி விவசாயிகளுக்கு மானியத்தொகை வழங்க அரசு முன்வர வேண்டும்.

இப்பகுதியில் நீர்வசதி உள்ள இடங்களில் தென்னையும், நடுத்தர அளவில் நீர் வசதி உள்ள பகுதிகளில் மாங்காய், சப்போட்டாவும், வறட்சிப் பகுதிகளில் புளி போன்ற மரங்களைப் பயிரிட வேண்டும் என அரசு விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் இப்பகுதிகளில் பருவச் சாகுபடி விளைபொருட்களுக்குப் பதிலாக மரங்கள் மூலம் சாகுபடி மேற்கொள்ளும் முறையைக் கையாள்வதே நல்லது.

இப்பகுதி விவசாயிகளுக்குத் தொழில்நுட்பம், விற்பனை வாய்ப்புகள், முதலீடு செய்தல் போன்றவற்றில் பெரும் சிரமங்கள்


இல்லை. பி.ஏ.பி. திட்டத்தை முறையாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது அரசின் கையில்தான் உள்ளது.

பி.ஏ.பி. காண்டூர் வாய்க்காலில் உள்ள குறைபாடுகள் மற்றும் உள்ள பிரதான கிளை வாய்க்கால்களில் உள்ள குறைபாடுகளைச் சீரமைக்க வேண்டும். அப்போதுதான் நீர் வீணாவதைத் தடுப்ப தோடு, முழு அளவு நீரையும் பெற முடியும். ஆனைமலையாறு, நல்லாறு அணைகளைக் கட்ட தமிழக அரசு மேற்கொண்டு வரும் முயற்சி விவசாயிகளுக்கு திருப்தியளிக்கும் வகையில் இல்லை. கேரளா அரசு மறைக்கும் உண்மைகளைத் தமிழக அரசு வெளிக் கொண்டு வர வேண்டியது அவசியம்.

மேலும், பி.ஏ.பி. திட்டத்தின் மூலம் பயன்பெறும் நிலங்களில் சுமார் ஒன்றரை லட்சம் ஏக்கர் பரப்பளவு நிலங்களே முழுமையாகப் பயன்பெறுகின்றன. மற்ற நிலங்கள் தரிசு நிலங்களாக உள்ளன. அல்லது தொழிற்சாலைகள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலங்களை இந்தத் திட்டத்தில் இருந்து நீக்குவதற்கு யாரும் முன்வருதில்லை. பாசனநீர் வேண்டாம் என தெரிவித்தால் வாய்க்கால்கள் கட்டியது உட்பட பல்வேறு கட்டுமானச் செலவு களுக்குச் செலவழித்த தொகையைத் திரும்பச் செலுத்துமாறு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பாசன நீர் விழலுக்கு இறைத்த நீராக இப்பகுதிகளில் வீணாகிறது. இப்பிரச்சனை குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்.

பி.ஏ.பி.திட்டத்தை முறையாக மாற்றியமைக்க வேண்டியதும், இதற்கு விவசாயிகள் பிரதிநிதிகள் தெரிவிக்கும் யோசனைக்கு உரிய மதிப்பளிப்பதும் அவசியம். இல்லாவிட்டால் விவசாயிகளின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தால் எந்தப் பயனும் இல்லாமல் போய்விடும் அபாயம் ஏற்பட்டுவிடும்.

– 14.11.1997 அன்று தினமலர் பத்திரிக்கைக்கு கொடுத்த பேட்டி.


GOVERNMENT OF TAMILNADU
PUBLIC WORKS DEPARTMENT
WATER RESOURCES ORGANISATION
PARAMBIKULAM ALIYAR PROJECT
FLOW DIAGRAM
3800
3350
3290
1825
1770
1770
2525
1337
1050
UPPER NIRAR WEIR
TUNNEL
SHOLAYAR
LOWER NIRAR DAM
TAMILNADU SHOLAYAR DAM
SHOLAYAR POWER HOUSE–II
PENSTOCK
SHOLAYAR POWER HOUSE–I
PERIYAR
PARAMBIKULAM DAM
THUNAKADAVU RESERVOIR
PERUVARIPALLAM RESERVOIR
UPPER ALIYAR DAM
SETHUMADAI CANAL
ALIYAR FEEDER CANAL
SARKARPATHY POWER HOUSE
ALIYAR POWER HOUSE
NAVAMALAI TUNNEL
CONTOUR CANAL
THIRUMURTHY DAM
PARAMBIKULAM MAIN CANAL
UDUMALPET CANAL
VETTAKARANPUDUR CANAL
POLLACHI CANAL
ALIYAR DAM
WESTERN SLOPE : EASTERN SLOPE





வெளியீடு:

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம்

ஏர்முனை இளைஞர் அணி

ஆனைமலையாறு நல்லாறு தண்ணீருக்கான இயக்கம்

தலைமை அலுவலகம் : உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அறக்கட்டளை
எண். 65 உழவாலயம், NMS மரக்கடை சந்து, காமராஜர் சாலை, திருப்பூர்–641 604
போன்: 0421 – 2236787

அச்சாக்கம் :
அச்சுக்கலையின் அமைப்புக்கோட்டம்...
ரவி அச்சகம், உடுமலைப்பேட்டை. 99439 78256